# දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
# DEPARTMENT OF INLAND REVENUE

ලේකම්අංශය
14වනමහල
දේශීයආදායම්ගොඩනැගිල්ල
ශ්‍රීමත්චිත්තම්පලම්ඒගාඩිනර්මාවත
තැ.පෙ. 515, කොළඹ2- ශ්‍රීලංකාව

செயலகம்
14 வதுமாடி
உள்நாட்டுஇறைவரிக்கட்டிடம்
சேர்சிற்றம்பலம்ஏகாடினர்மாவத்தை
த.பெ.இல. 515,கொழும்பு -2,இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011 – 2338570/ 2338574/ 2338543/ 2338635/ 2338659
දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135402/ 2135410/ 20135411 2135412 / 2135413
E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk


**சுற்றுநிருப இல: SEC/2020/03 (மீள்திருத்தப்பட்ட)** **08 ஜூன் 2020**

**வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்களுக்கான சுற்றுநிருபம்**

# நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரி என்பனவற்றைக் கழித்தல்

இந்த சுற்றுநிருபம், எவரேனும் வைப்பாளர் ஒருவருக்கு வட்டி, கழிப்பனவு, இஸ்லாமிய நிதியியல்கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானம் என்பவற்றைக் கொடுப்பனவு செய்கையில் அதிலிருந்து **நிறுத்திவைத்தல் வரி** அல்லது **முற்பண வருமான வரியைக்** கழிப்பதற்கு 2017ம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு மேற்கொள்ளப்படும் முறையான முன்மொழிவுத் திருத்தங்களுக்கு பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டு, நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைவாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் 06.04.2020ம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் **PN/IT/2020 - 03** (திருத்தப்பட்ட) அறிவித்தலின் ஊடாக அறிவிக்கப்பட்ட முன்மொழியப்பட்ட மாற்றங்களின் பிரயோகம் தொடர்பாக வசதியளிப்பதற்கு வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கான விளக்கக்குறிப்புகளையும் வழிகாட்டல்களையும் கொண்டுள்ளது.

இந்தச் சுற்றுநிருபத்தினால், 19 மே 2020ம் திகதியிடப்பட்ட சுற்றுநிரூபம் பதிலீடு செய்யப்படுகின்றது.

## அ. வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி

எவரேனும் வதிவற்ற ஆளொருவருக்கு மேற்கொள்ளப்படும் வட்டி அல்லது அதையொத்த கொடுப்பனவுகள் மீது மாத்திரம் நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்படுதல் வேண்டும்.

### 1. நிறுத்திவைத்தல் வரிக் கொடுப்பனவுகள் மற்றும் வரி வீதங்கள்

ஏதேனும் வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் எவரேனும் வதிவற்ற ஆளொருவருக்கு வட்டி (விலக்களிக்கப்பட்ட வட்டி தவிர்த்து), கழிப்பனவு மற்றும் இஸ்லாமிய நிதியியல் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தைக் (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 32ற்கு அமைவாக) கொடுப்பனவு செய்யும் பொழுது, இலங்கையில் மூலத்தைக் கொண்டிருக்கும் எந்தவொரு கொடுப்பனவின் மீதும் 5% வீத நிறுத்திவைத்தல் வரியைக் கழிப்பதற்கு பொறுப்புடையதாகும்.

எனினும், வதிவற்ற ஆளொருவர், ஆனால் பிரசையாகவுள்ள நபர் தொடர்பில், நிறுத்திவைத்தல் வரிக்கழிப்பனவு, வங்கி/நிதி நிறுவனம் ஒன்றிலிருந்து மொத்த வட்டி வருமானம் மாதமொன்றுக்கு ரூபா 250,000 அல்லது வரி மதிப்பீட்டான்டிற்கு ரூபா 3,000,000 இனை விஞ்சுமிடத்து மாத்திரமே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இந்தநோக்கத்திற்காக, நிறுத்திவைத்தல் வரியைக கழிப்பதைத் தவிர்த்துக் கொள்வதற்கு அல்லது சரியான தொகையின் மீது நிறுத்திவைத்தல் வரியைக் கழிப்பதற்கு, உரிய தனியாளிடமிருந்து அல்லது அவரின் உரிய அதிகாரம் பெற்ற முகவரிடமிருந்து அல்லது சட்டத்தரணியிடமிருந்து அந்த வரிமதிப்பீட்டாண்டில் அந்த தனியாளின் வரிமதிக்கத்தக்க வருமானம் ரூபா 3,000,000ஐ விஞ்சவில்லையென பிரகடனமொன்றை வங்கி/ நிதி நிறுவனம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். (இந்த பிரகடனத்தின் மாதிரிக்காக தயவுசெய்து இணைப்பு 1ஐப் பார்க்கவும்). நிறுத்திவைத்தல் வரியைக் கழிப்பதற்கான பிரகடனம் கிடைக்கப்பெற்றால், அந்த வங்கியினால் அல்லது நிதி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் அவருடைய திரட்டிய வட்டி வருமானம் அல்லது அதையொத்த கொடுப்பனவின் பெறுமதி, அந்த வரி மதிப்பீட்டாண்டில் ரூபா 3,000,000 ஐ விஞ்சாத போதிலும், அதனைக் கருத்தில் கொள்ளாது பிரகடனத்தில் கொடுக்கப்பட்ட தொகையின் மீது நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படுதல் வேண்டும். **ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும், மொத்த வட்டிக் கொடுப்பனவின் மீது நிறுத்திவைத்தல் வரி கழிக்கப்படுதல் வேண்டும்.**

## 2. இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைப் பிரயோகித்தல்.

இலங்கைக்கும் வதிவற்ற நபரின் வதிவுடைய நாட்டிற்கும் இடையில் காணப்படும் இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, வட்டியின் மீது குறைந்த நிறுத்தி வைத்தல் வீதம் (மேலே 1ல் குறிப்பிட்ட வீதங்களுடன் ஒப்பிட்டு) பிரயோகிக்கப்படுதல் வேண்டும். வதிவற்ற நபரொருவருக்கு அவ்வாறான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் ஆளொருவர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து வரி இசைவாணைச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு வேண்டப்படுவதுடன், அவ்வாறான வரி இசைவாணைச் சான்றிதழ் வழங்கப்பட்டால் மட்டுமே குறைந்த வீதம் கவனத்தில் கொள்ளப்படும். இந்த நோக்கத்திற்காக, வங்கி அல்லது நிதி நிறுவனத்தினால் இந்த நிவாரணத்தை கோரும் நபர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு இசைவாணைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கமைவாக நிறுத்தி வைத்தல் வரி கழிக்கப்படுதல் வேண்டும்.

## 3. நிறுத்திவைத்தல் வரியை கழிக்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்

i. நிறுத்திவைத்தல் வரிக் கழிப்பனவுக்காக மொத்த வட்டி, வட்டியாகக் கருதப்படும் (கடன் வேண்டுகோளுக்கு கீழ் மேற்கொள்ளப்படும் மீள்கொடுப்பனவுகள் தவிர்த்து). மூலக்கொடுப்பனவிற்கு மேலதிகமாக கொடுக்கப்படும் தொகை, கழிவு அல்லது இஸ்லாமிய நிதியியல்கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைக்கப்பெறும் இலாபம் என்பவை நிறுத்திவைத்தல் வரிக்குட்படும்.

ii. எவரேனும் ஆள், வதிவற்ற ஆளொருவருக்கு உரிய முழு வட்டிக் கொடுப்பனவின் மொத்தத் தொகையை (நிறுத்திவைத்தல் வரியை கழிப்பதற்கு முன்) கொடுப்பனவு செய்ய/ அனுப்ப விரும்பின், அந்த தொகை நிகரத் தொகையாகக் கருதப்படுவதுடன், நிறுத்திவைத்தல் வரியானது கூட்டப்பட்ட தொகை மீதான அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

iii. முதலீடானது இன்னொரு ஆளுடன் கூட்டாக சொந்தமானதாக இருந்தால், உரிய கொடுப்பனவானது கூட்டு உரிமையாளர்களிடையே அவர்களின் விருப்பத்திற்கு அமைவாக பிரிக்கப்படுதல் வேண்டும். கூட்டு உரிமையாளர்களின் விருப்பத்தை அறிய முடியாத வேளையில் அவை சமமானவையாக கருதப்படும்.

## 4. விலக்களிக்கப்பட்ட வட்டி

i. இலங்கையில் வதியும் எவரேனும் ஆள் ஒருவருக்கு அல்லது இலங்கை அரசாங்கத்திற்கு, இலங்கைக்கு வெளியிலுள்ள ஆள் ஒருவரினால் வழங்கப்பட்ட ஏதேனும் கடன் மீது திரளுகின்ற அல்லது பெறப்பட்ட வட்டி.

ii. இலங்கை மத்திய வங்கியின் அனுமதியுடன் ஏதேனும் வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் சிறப்பு வங்கியில் அவரினால் அல்லது அவர் சார்ப்பாக திறக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயக் கணக்கில் காணப்படும் வெளிநாட்டு நாணயத்தில் அவருக்கு காணப்படும் வரவு மீதான பணத்தில் எவரேனும் ஆளொருவரால் திரட்டப்பட்tட அல்லது பெறப்பட்ட வட்டி

iii. இலங்கை அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பாக விநியோகிகப்பட்ட ,
   - எவரேனும் வதிவற்ற ஆளொருவரால் (இலங்கையின் நிரத்தர தாபனம் தவிர்ந்த) உள்ளூர் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் குறிபிடப்பட்ட ஏதேனும இறையாண்மை முறி மீதான ஏதேனும் தேறிப்பெறுகை மீதான வட்டி. கழிப்பனவு அல்லது ஈட்டத்தினூடாக உழைக்கப்பட்ட ஏதேனும் வருமானம்.
   - எவரேனும் ஆளொருவரால் இலங்கை அபிவிருத்தி முறிகள் அடங்கலாக வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் இறையாண்மை முறி மீது செலுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வட்டி அல்லது கழிப்பனவூடாக உழைக்கப்பட்ட ஏதேனும் வருமானம்.

iv. பின்வருவனவற்றால் பெறப்பட்ட தொகைகள்

அ. இராஜதந்திர விடுபட்டுரிமைச் சட்டத்தின் அல்லது அதனையொத்த சட்டமொன்றின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அளவு வரை வெளிநாடொன்றின் அல்லது வெளிநாட்டு ஆட்புலமொன்றின் அரசாங்கம்

ஆ. இராஜதந்திர விடுபட்டுரிமைச் சட்டம் ஒன்று அல்லது அதனையொத்த சட்டமொன்று அல்லது ஒழுங்கமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கிடையிலான உடன்படிக்கையொன்றின் கீழ் குறித்துரைக்கப்பட்ட அளவு வரை சர்வதேச ஒழுங்கமைப்பொன்று, ஆயின் உடன்படிக்கையின் கீழான விலக்களிப்பு இராஜதந்திர விடுபட்டுரிமைச் சட்டம் அல்லது அதனையொத்த சட்டத்தையும் விட பரந்ததாகவிருத்தல் வேண்டும்.

**iv.** இலங்கை அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பில் 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் வழங்கப்பட்ட, வெளிநாட்டு நாணயத்தில் வகுக்கப்பட்ட ஏதேனும் இறையாண்மை முறியொன்றை வழங்குபவர் மூலம் எவரேனும் வதிவற்ற ஆளொருரக்கு இலங்கையிலுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வணிக வங்கிக்கு விடயத்திற்கு ஏற்ப, செலுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வட்டி அல்லது கழிவுக்கு சமமான தொகை.;

## ஆ. முற்பண வருமான வரி

எவரேனும் வதிவிட ஆளொருவருக்கு கொடுப்பனவு செய்யப்படும் ஏதேனும் வட்டி அல்லது அதனையொத்த கொடுப்பனவுகளில் இருந்து, அந்த ஆளினால் வழங்கப்படும் சம்மதத்தின் கீழ் முற்பண வருமான வரியினை கழிக்க முடியும். சம்மதம் வழங்கப்படாவிட்டால் முற்பண வருமான வரியினைக் கழிக்க முடியாது.

### 1. வங்கி அல்லது நிதியியல் நிறுவனத்திற்கான பிரகடனம்

வங்கி அல்லது நிதி நிறுவனத்திடமிருந்து இலங்கையில் மூலத்தைக் கொண்டுள்ள வட்டி (விதிவிலக்குப் பெற்ற வட்டி தவிர்ந்தவை), கழிப்பனவு மற்றும் இஸ்லாமிய நிதியியல் கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைக்கப்பெறும் அல்லது ஈட்டப்படும் வருமானம் (உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 32ற்கு அமைவாக) போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளும் அல்லது ஈட்டிக்கொள்ளும் வதிவுள்ள ஆளொருவர், வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு முற்பண வருமான வரியைக் கழிப்பதற்கான தனது சம்மதத்தை வழங்கப்பட்ட மாதிரிக்கு அமைவாக [இணைப்பு 2(a) **மற்றும்** 2(b)] பிரகடனத்தை வழங்க முடியும்..

### 2. கழிப்பனவு வீதங்கள்

வதிவுள்ள தனியாள் ஆயின், கொடுப்பனவு செய்யப்படும் எந்தவொரு தொகையின் மீதும், அந்த தனியாளொருவர் கீழே குறிப்பிடப்பட்ட வரி வீதங்களில் இருந்து மிகவும் பொருத்தமான (ஒற்றை) வருமான வீதத◌ைப் பிரயோகித்து முற்பண வருமான வரியைக் அவரின் பிரகடனத்தில் பிரகடனப்படுத்தியவாறு கழிக்க முடியும்.

| வட்டியின் தொகை (ரூபா) | தனியாளொருவரினால் பிரகடனப்படுத்தப்பட்ட வரி வீதம் |
|---|---|
| வதிவிட தனியாளினால் வங்கியிலிருந்து அல்லது நிதி நிறுவனத்திலிருந்து பெற்ற அல்லது ஈட்டிய எந்தவொரு தொகைக்கும், மொத்த வட்டித் தொகை வரை | **6%** |
| | **12%** |
| | **18%** |

**வதிவிட தனியாள் தவிர்ந்த ஏனைய வதிவிட ஆள் விடயத்தில்,** கொடுப்பனவுத் தொகை மற்றும் அதற்கான வீதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| உருவகத்தின் வகை | வரி வீதம் | கொடுப்பனவுத் தொகை (ரூபா)* |
|---|---|---|
| **பங்குடமை** | 6% | |
| **தர்ம தாபனம்** | 14% | |
| **ஊழியர் நம்பிக்கை நிதியம்,சேமலாப நிதியம், ஒய்வூதிய நிதியம் அல்லது முடிவுறுத்தல் நிதியங்கள்** | 14% | |
| **வதிவிட கம்பனிகள் உள்ளடங்கலாக ஏனைய வதிவிட உருவகங்கள்** | 24% | |

*(முற்பண வருமான வரி பிரகடனப்படுத்துபவரினால் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவின் மீது பிரயோகிக்கப்படுதல் வேண்டும். பிரகடனப்படுத்துபவர் விலக்களிக்கப்பட்ட வட்டித் தொகையை முற்பண வருமான வரிக்காக விலக்க முடியும்.)*

## இ. நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண தனியாள் வரி என்பவற்றுக்கு பொதுவாக பிரயோகிக்கக்கூடிய வழிகாட்டல்

### 1. கழிப்பனவு நேரம்

வங்கி அல்லது நிதி நிறுவனம், அந்த நபருக்கு அந்தத் தொகையினைக் கொடுப்பனவு செய்யும் போது, வரவு வைக்கும் போது, மீள் முதலீடு செய்யும் பொழுது, ஒன்று சேர்க்கும் போது, மூலதனப்படுத்தும் போது அல்லது கிடைக்கச் செய்யும் பொழுது வரியைக் கழிக்க வேண்டும்.

### 2. கழிப்பனவு செய்யப்பட்ட வரிக் கொடுப்பனவு

நிறுத்திவைத்தல் வரியை அல்லது முற்பண வருமான வரியைக் கழித்த ஒவ்வொரு வங்கியும் அல்லது நிதி நிறுவனமும் அதனை ஒவ்வொரு மாதம் முடிவடைந்ததும் அதனை உடனடுத்து வரும் பதினைந்து நாட்களினுள் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு கொடுப்பனவு செய்தல் வேண்டும். அக் கொடுப்பனவுக்கான வரி வகைக் குறியீடு கீழே தரப்பட்டுள்ளது.

- வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி அல்லது முற்பண வருமான வரி - 43

## 3. கழிப்பனவுக்கான சான்றிதழ்

நிறுத்திவைத்தல் வரியை அல்லது முற்பண வருமான வரியைக் கழித்த ஒவ்வொரு வங்கியும் அல்லது நிதி நிறுவனமும் ஒவ்வொரு நபருக்கும் குறித்துரைக்கப்பட்ட வடிவத்தில் நிறுத்திவைத்தல் வரி அல்லது முற்பண வருமான வரி கழிப்பனவுக்கான சான்றிதழை வழங்குவதற்கு கோரப்படுகின்றது. நிறுத்திவைத்தல் வரி அல்லது முற்பண வருமான வரிச் சான்றிதழ் ஒரு பஞ்சாங்க மாதத்தை உள்ளடக்கியிருக்கவேண்டியதுடன், அதனை அம் மாதம் முடிந்து முப்பது நாட்களினுள் அல்லது உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் அனுமதியளிக்கப்பட்ட காலத்தினுள் வழங்குதல் வேண்டும்.

## 4. பொய்யான அல்லது தவறான கூற்று

உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 181ற்கு அமைவாக, வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பிரகடனம், கூற்று அல்லது சான்றிதழ் வரி அலுவலவலர்களுக்கு வழங்கப்பட்டதாக கருதப்படுகின்றதுடன் முக்கியத்துவமிக்க விடயம் தொடர்பாக பொய்யான அல்லது தவறானவற்றை வழங்கியிருந்தால் அதற்கு தண்டம் விதிக்கப்படும்.

## 5. வங்கி அல்லது நிதி நிறுவனம் என்பவற்றினால் பேணவேண்டிய பதிவேடுகள் மற்றும் அவர்களுடைய கடப்பாடுகள்

i. நிறுத்திவைத்தல் வரியை அல்லது முற்பண வருமான வரியைக் கழித்த ஒவ்வொரு வங்கியும் அல்லது நிதி நிறுவனமும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கீழ் நிறுத்திவைத்தல் முகவராக பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். பதிவினைப் பெற்றுக் கொள்ளாவிட்டால், நிறுத்திவைத்தல் வரியை அல்லது முற்பண வருமான வரியைக் கழிப்பதற்கு 30 நாட்களுக்கு பிந்தாமல் உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து பதிவிலக்கத்தினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ii. முற்பண வருமான வரியைக் கழிக்கும் நோக்கத்திற்காக எந்தவொரு வங்கியும் அல்லது நிதி நிறுவனமும் வேறொரு பதிவினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதுடன், அவர்கள் நிறுத்தி வைத்தல் முகவராகப் பெற்றுக்கொண்ட பதிவின் கீழ் அதனைத் தொடர முடியும்.

iii. அந்த ஆட்கள், அனைத்து நிறுத்திவைத்தல் வரி அல்லது முற்பண வருமான வரிக் கொடுப்பனவுகள் தொடர்பாக கொடுக்கப்பட்ட மாதிரிக்கமைவாக (தயவுசெய்து இணைப்பு 4ஐப் பார்க்கவும்) உரிய பதிவேடுகளைப் ( அவர்களினால் பெறப்பட்ட பிரகடனங்கள் உள்ளடங்கலாக) பேணுதல் வேண்டும்.

**iv.** நிறுத்திவைத்தல் வரி மற்றும் முற்பண வருமான வரி மீது வருடாந்த பிரகடனத்திற்கான அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அந்த அட்டவணைகள் மென்பிரதி வடிவில் (Excel csv format)சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பதிவுகளின் எண்ணிக்கை 20ஐ விடக் குறைவாக இருப்பின் வன்பிரதியை சமர்ப்பிக்க முடியும்.

**ஏ.நதுன் குருகே**
**உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்**

**இணைப்பு 1**

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

……………………………..
……………………………...
……………………………...
**(வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)**

**கணக்கு இலக்கம்/ கணக்கு இலக்கங்கள்** ……………………………………………
**வரிமதிப்பீட்டாண்டு**: …………………………………

## வதிவற்ற இலங்கை பிரஜையான தனியாளினால் வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு வழங்கும் பிரகடனம்

……………………………………………………………………………………………
……………………………………………………………… (பிரகடனப்படுத்துபவரின் முகவரி)யில் வசிக்கும்
………………………………………………………………………(பிரகடனப்படுத்துபவரின் முழுப்பெயர்) ஆகிய நான், இதனுடாக கீழ்வருமாறு பிரகடனப்படுத்துகின்றேன்.

நான் ஒர் இலங்கைப் பிரஜை (இலங்கை பிரஜா உரிமைச் சட்டத்தின்படி). ஆனால் இலங்கையில் வதிவைக் கொண்டிருக்கவில்லை (2017ம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக). *

நான், ……………………………………………………………………………………
……………………………………………………………… (வைப்பாளரின் முகவரி)யில் வசிக்கும் திரு/திருமதி/செல்வி ………………………………………………………………
……………………………………………………………… (வைப்பாளரின் முழுப்பெயர்) அவர்களின் உரியஅங்கீகாரம் பெற்ற முகவர்/ சட்டத்தரணி*. அவர் ஒர் இலங்கைப் பிரஜை (இலங்கை பிரஜா உரிமைச் சட்டத்தின்படி). ஆனால் இலங்கையில் வதிவைக் கொண்டிருக்கவில்லை (2017ம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக). *

1.மேற்குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டில் கிடைக்கப்பெறும் எனது/ அவரின் வரி மதிக்கத்தக்க வருமானம் ( இலஙகையிலுள்ள ஏனைய மூலங்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானங்கள் உள்ளடங்கலாக) ரூபா 3,000,000 விஞ்சமாட்டாது.

அதனால், தயவுசெய்து மேற்குறித்த வரிமதிப்பீட்டாண்டுக்கு நிறுத்திவைத்தல் வரியைக் கழிக்க வேண்டாம்.

2. மேற்குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டில் கிடைக்கப்பெறும் எனது/ அவரின் வரி மதிக்கத்தக்க வருமானம் ( இலஙகையிலுள்ள ஏனைய மூலங்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானங்கள் உள்ளடங்கலாக) ரூபா 3,000,000 விஞ்சும்.
அதனால், தயவுசெய்து மேற்குறித்த வரிமதிப்பீட்டாண்டுக்கு மொத்த வட்டிக் கொடுப்பனவின் மீது அல்லது ரூபா.............................. ஐ விஞ்சும் தொகையின் மீது நிறுத்திவைத்தல் வரியைக் கழிக்கவும்.
[=**ரூபா**. 3,000,000 – இந்த வட்டியைத் தவிர்த்து இலங்கையிலிருந்து வரும் ஏனைய மூலங்களில் இருந்தான வருமானம் (ஏனைய மூலங்களில் இருந்தான வருமானம் ரூபா 3 மில்லியனை விடக் குறைவாயின்)] *

**வைப்பாளரின்,**

**கடவுச் சீட்டு இலக்கம் மற்றும் வழங்கிய நாடு** ……………………………………………

**இலங்கையின் தேசிய அடையாள அட்டை இலக்கம் (ஏதுமிருப்பின்)** .................................

**வரிசெலுத்துனர் அடையாள அட்டை இலக்கம் (ஏதுமிருப்பின்)**.............................

**வதிவிட நாடு** ……………………………………………….

என்னால் மேற்குறிப்பிட்ட பிரகடனம் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

..................................... ......................................................

**திகதி** **பிரகடனப்படுத்துபவரின் கையொப்பம்**

(*தயவுசெய்து பொருத்தமல்லாதவற்றை நீக்கிவிடவும்)

**குறிப்பு**

*உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரிவு 181ற்கு அமைவாக, வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பிரகடனம், கூற்று அல்லது சான்றிதழ் வரி அலுலவலர்களுக்கு வழங்கப்பட்டதாக கருதப்படுகின்றதுடன் முக்கியமான விடயம் தொடர்பாக பொய்யான அல்லது தவறானவற்றை வழங்கியிருந்தால் அதற்கு தண்டம் விதிக்கப்படும்.*

**இணைப்பு 2 (a)**

# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

……………………………..
……………………………...
……………………………...
**(வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)**

**கணக்கு இலக்கம்/ கணக்கு இலக்கங்கள்** ……………………………………………
**வரிமதிப்பீட்டாண்டு**: ………………………………

## வதிவிட தனியாளினால் வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு வழங்கப்படும் பிரகடனம்

**……………………………………………………………………………………………**
**……………………………………………………………………… (**பிரகடனப்படுத்துபவரின் முகவரி) யில் வசிக்கும் **……………………………………………………………………**
**(**பிரகடனப்படுத்துபவரின் முழுப்பெயர்) ஆகிய நான், இதனுடாக கீழ்வருமாறு பிரகடனப்படுத்துகின்றேன்.

நான் இலங்கையில் வதிவைக் கொண்டுள்ளதுடன் (2017ம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக) மேற்குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டில் கிடைக்கப்பெறும் எனது வரி மதிக்கத்தக்க வருமானம் ( ஏனைய மூலங்களில் இருந்து கிடைக்கப் பெறும் வருமானங்கள் உள்ளடங்கலாக) ரூபா 3,000,000 விஞ்சும்.

அதனால், தயவுசெய்து மேற்குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டுக்கு எனது மொத்த வட்டிக் கொடுப்பனவுகளின் மீது/ ரூபா ................................ தொகையின் மீது *6%/ 12%/ 18% வரி வீதத்தில் முற்பண வருமான வரியைக் கழிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.
**(*தயவுசெய்து பொருத்தமல்லாதவற்றை நீக்கிவிடவும்)**

தேசிய அடையாள அட்டை இல. ...........................................
வரி செலுத்துனர் அடையாள அட்டை இலக்கம் ........................................

என்னால் மேற்குறிப்பிட்ட பிரகடனம் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.
எனது வதிவிட நிலையில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்டால், அந்த மாற்றம் நிகழ்ந்தவுடன் அறியத்தருவேன்.

.................................... ......................................................

**திகதி** **பிரகடனப்படுத்துபவரின் கையொப்பம்**

**இணைப்பு 2(b)**

# உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

……………………………..
……………………………...
……………………………...
**(வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி)**

**கணக்கு இலக்கம்/ கணக்கு இலக்கங்கள்** …………………………………………….
**வரிமதிப்பீட்டாண்டு**: ………………………………..

## வதிவிட உருவங்களினால்

## வங்கி அல்லது நிதி நிறுவனத்திற்கு வழங்கப்படும் பிரகடனம்

…………………………………………………………………………………………………………………
………………………………………..(உருவகத்தின் முகவரி)யில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டு இயங்கும் ……………………………………………………………………………………… (உருவகத்தின் பெயர்) எனும் நிறுவனத்தில் ................................................................. (பதவி) ஆக இருக்கும் ………………………………………………………………… (பிரகடனப்படுத்துபவர், முகாமையாளர், பணிப்பாளர், செயலாளர் அல்லது உருவகத்தின் அதிகாரம் பெற்ற அலுவலரின் முழுப்பெயர்) நான், இதனுடாக கீழ்வருமாறு பிரகடனப்படுத்துகின்றேன். இந்த நிறுவனம் இலங்கையில் வதிவைக் கொண்டுள்ள நிறுவனமாவதுடன் (2017ம் ஆண்டு 24ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக) மேற்குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டில் இந்த நிறுவனம் வரிமதிக்கத்தக்க வருமானத்தை உழைத்துக் கொள்ளக்கூடும்.

அதனால், தயவுசெய்து மேற்குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டுக்கு எனது வட்டிக் கொடுப்பனவுகளின் மீது முற்பண வருமான வரியைக் கீழ்வருமாறு கழிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| உருவகத்தின் வகை | வரி வீதம் | கொடுப்பனவுத் தொகை (ரூபா)* |
|---|---|---|
| **பங்குடமை** | 6% | |
| **தர்ம தாபனம்** | 14% | |
| **ஊழியர் நம்பிக்கை நிதியம்,சேமலாப நிதியம், ஒய்வூதிய நிதியம் அல்லது முடிவுறுத்தல் நிதியங்கள்** | 14% | |
| **வதிவிட கம்பனிகள் உள்ளடங்கலாக ஏனைய வதிவிட உருவகங்கள்** | 24% | |
| **ஏனையவை**** | ** | |

**(பணிப்புரை வழங்குபவரினால் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவின் மீது முற்பண நிறுத்தி வைத்தல் வரி பிரயோகிக்கப்படுதல் வேண்டும். )*
** உருவகத்தின் வகையையும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்படி உருவகத்திற்கு பிரயோகிக்க வேண்டிய வரி வீதத்தையும் தயவுசெய்து குறிப்பிடுக.

உருவகத்தின் வகை: பங்குடமை/ தர்ம நிறுவனம்/ ஊழியர் நம்பிக்கை நிதியம்/ ஊழியர் சேமலாப நிதியம்/ ஓய்வூதிய நிதியம்/ ஊழியர் சேவை முடிவுறுத்தல் நிதியங்கள்/ கம்பனி/ கூட்டுத்தாபனங்கள்/ ஏனைய உருவகம்**.......................................................**
**(**தயவுசெய்து உருவகத்தின் வகையைக் குறிப்பிடவும் அல்லது பொருத்தமற்றவற்றை நீக்கி விடவும்**)**

வரி செலுத்துனர் அடையாள அட்டை இலக்கம் .........................................

என்னால் மேற்குறிப்பிட்ட பிரகடனம் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................
**திகதி**

......................................................
**பிரகடனப்படுத்துபவரின் கையொப்பம்**

**இணைப்பு 3(a)**

சான்றிதழ் இலக்கம் / தொடர் இலக்கம்: ……………………………………………

நிறுத்திவைத்தல் முகவரின் வரிசெலுத்துனர் இலக்கம்:……………………………………

## முற்பண வருமான வரிக் கழிப்பனவுச் சான்றிதழ்

வங்கி / நிதி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி

…………………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………………

பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி: ………………………………………………………………

………………………………………………………………………………………………………………

பிரகடனத்தின் குறிப்பு இலக்கம் …………………………………………………………

தேசிய அடையாள அட்டை இலக்கம்/ கடவுச் சீட்டு இலக்கம் / வரி செலுத்துனர் இலக்கம் …………………

காலம்: இருந்து: ……………………வரை: ………………………………

மொத்தக் கொடுப்பனவுத் தொகை (ரூபா): ……………………………………..

| **ஆளின் வகை** | **பிரயோகிக்கப்பட்ட வீதம்** | **முற்பண வருமான வரிக்கு உரிய தொகை (ரூபா)** | **கழிக்கப்பட்ட முற்பண வருமான வரித் தொகை (ரூபா)** |
|---|---|---|---|
| வதிவுள்ள தனியாள் | 6% | | |
| | 12% | | |
| | 18% | | |
| வதிவுள்ள உருவகம் | 6% | | |
| | 14% | | |
| | 24% | | |
| ஏனையவை | | | |
| **மொத்தம்** | | | |
| | | | |

……………………………..……..…………………  ………………………..…………………

அதிகாரம்பெற்ற அலுவலரின் பெயர் மற்றும் கையொப்பம்

….………………………

திகதி

சான்றிதழ் இலக்கம் / தொடர் இலக்கம்: …………………………………………

நிறுத்திவைத்தல் முகவரின் வரிசெலுத்துனர் இலக்கம்:……………………………………

## நிறுத்திவைத்தல் வரிக் கழிப்பனவுச் சான்றிதழ்

வங்கி / நிதி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி

………………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………………

பெறுபவரின் பெயர் மற்றும் முகவரி: ……………………………………………………………..

……………………………………………………………………………………………………

பிரகடனத்தின் குறிப்பு இலக்கம் ……………………………………………………

தேசிய அடையாள அட்டை இலக்கம்/ கடவுச் சீட்டு இலக்கம் / வரி செலுத்துனர் இலக்கம் (இலங்கை)

……………………………………………………

காலம்: இருந்து: ……………………வரை: ………………………………

மொத்தக் கொடுப்பனவுத் தொகை (ரூபா): ……………………………………..

| **ஆளின் வகை** | **நிறுத்திவைத்தல் வீதம் %** | **நிறுத்திவைத்தல் வரிக்கு உரிய தொகை (ரூபா)** | **கழிக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரித் தொகை (ரூபா)** |
|---|---|---|---|
| வதிவற்ற தனியாள் ஆனால் இலங்கைப் பிரஜை | | | |
| வதிவற்ற தனியாள் மற்றும் இலங்கைப் பிரஜை அல்லாதவர் | | | |
| வதிவற்ற உருவகம் | | | |

……………………………..……..…………………… ……………………….…………………

அதிகாரம்பெற்ற அலுவலரின் பெயர் மற்றும் கையொப்பம்

….………………………

திகதி

**இணைப்பு 4**

## நிறுத்தி வைத்தல் வரி / முற்பண வருமான வரிக் கழிப்பனவு

**கீழ்வரும் அட்டவணை வதிவற்ற நபர்களுக்கு வட்டிக் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது தயாரிக்கப்படுதல் வேண்டும்.**

| தொடர் இலக்கம் | பெறுபவரின் பெயர் | பெறுபவரின் முகவரி | வதிவிட நாடு | இலங்கைப் பிரஜையா அல்லது | பிரகடன குறிப்பு இலக்கம் (பிரஜை) | கணக்கு இலக்கம் | கொடுப்பனவுக் காலம் | கொடுப்பனவு செய்யப்பட்ட | வரிசெலுத்துனர் அடையாள | வரி இசைவாணைச் சான்றிதழ் | கழிப்பனவுக்கு கருத்தில் | வரி வீதம் | கழிக்கப்பட்ட வரித் தொகை | கொடுப்பனவு செய்யப்பட்ட தேறிய | நிறுத்திவைத்தல் சான்றிதழ் இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | |

**முற்பண வருமான வரிக் கழிப்பனவுக்கு கீழ்வரும் அட்டவணை தயாரிக்கப்படுதல் வேண்டும்**

| தொடர் இலக்கம் | பெயர் | முகவரி | வரிசெலுத்துனர் அடையாள அட்டை / தேசிய அடையாள | கணக்கு இலக்கம் | கொடுப்பனவுக் காலம் | கொடுப்பனவு செய்யப்பட்ட | பிரகடன குறிப்பு இலக்கம் | கழிப்பனவுக்கு கருத்தில் | வரி வீதம் | கழிக்கப்பட்ட வரித் தொகை | கொடுப்பனவு செய்யப்பட்ட தேறிய தொகை | சான்றிதழ் இலக்கம் (வழங்கப்பட்டால்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | |